**செய்தி வெளியீடு எண்: 125** **நாள்: 13.02.2020**

## தமிழ் வளர்ச்சித் துறை

சென்னை மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கான
ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம்

தமிழ்நாட்டின் ஆட்சிமொழி “தமிழ் மொழி” என்று அறிவிக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட்ட நாள்முதலாக அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித்திட்டச் செயலாக்கம் விரைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது அரசின் விழுமிய நோக்கமான “இன்றும் தமிழ்” “என்றும் தமிழ்” வெற்றி பெற தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடத்தப்பெற்று வருகிறது .

அன்னைத் தமிழிலேயே அலுவல் பணிகள் அனைத்தும் முழுமையாக நடைபெறும் வகையில் சென்னை தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சென்னை மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கான ஆட்சிமொழிப் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் **18.02.2020, 19.02.2020** ஆகிய நாள்களில் நடத்தப்பெற உள்ளன. ஆட்சிமொழிப் பயிலரங்கில் சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஆட்சிமொழி வரலாறு/சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்கம், அரசாணைகள், மொழிபெயர்ப்பு, கலைச்சொல்லாக்கம், அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள், ஆட்சிமொழி ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும், மொழிப்பயிற்சி ஆகியவை குறித்து சிறப்பாக பயிற்சி அளிக்கப்பெறும். ஆட்சிமொழிக் கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்ச்சான்றோர்கள் பங்கேற்று கருத்துரை வழங்க உள்ளனர்.

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>பேரறிஞர் அண்ணா கருத்தரங்குக் கூடம்<br>தரமணி சென்னை 600 113 |
| நாள் | 18.02.2020, 19.02.2020 |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**